# றோயல் கல்லூரி – கொழும்பு 07

## இரண்டாம் தவணை - 2022

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I**

**தரம் 11**

***03 மணித்தியாலம்***

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1 – 40 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 ஆகிய விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.

- பின்வரும் பந்தியை வாசித்து 1 தொடக்கம் 4 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

நெல் மற்றும் காய்கறிகளை பயிரிடும் விவசாய துறையில் பியதாஸ வேலை செய்கிறார் அவர் தமது விவசாய செயற்பாடுகளுக்கு நவீன தொழினுட்பத்தை கையாள்கிறார்.

1. நெல் மற்றும் காய்களிகளால் பூர்த்தி செய்யப்படும் தேவை யாது?
   I. சுகாதாரம்
   II. உணவு
   III. பாதுகாப்பு
   IV. அரிசி

2. மேலே தரப்பட்டுள்ள விடயத்தின்படி பயன்படுத்தப்பட்டுள்ள உற்பத்தி காரணி எது?
   I. நிலம்
   II. உழைப்பு
   III. மூலதனம்
   IV. முயற்சி

3. பியதாஸவிடம் நியாயமான விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ள விரும்பும் கட்சியினர்,
   I. வாடிக்கையாளர்
   II. ஊழியர்கள்
   III. நிதிநிறுவனங்கள்
   IV. முகாமையாளர்கள்

4. அண்மிய காலங்களில் பியதாஸவின் விவசாய நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்திய சவாலாக அமையக் கூடியது,
   I. இரசாயன உரப் பாவனையை அரசு தடை செய்தமை.
   II. தொற்றுநோய்ப் பரவல் காரணமாக தனியாள் வருமானம் குறைவடைந்தமை
   III. நீர் மூலங்களில் வரட்சி.
   IV. விவசாயத்திற்கு அவசியமான உபகரணங்களை ஏற்றுமதி செய்தல் தடை செய்யப்பட்டமை

பின்வரும் விடயத்தைக் கொண்டு வினா 05 மற்றும் 06 இற்கு விடை தருக.

றயான் மற்றும் றயினி ஆகியோர் சமமாக மூலதனமிட்டு நடாத்தும் வணிகத்தின் கேள்வி தொற்று நோய்ப் பரவல் காரணமாக குறைவடைந்ததுடன் விற்பனை வருமானம் வீழ்ச்சி அடைந்தது. எனவே அவர்கள் வணிகத்தை மூடுவதற்கு முடிவு செய்தனர். அத்துடன் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கு தமது சொந்த சொத்துக்களையும் பயன்படுத்த வேண்டியிருந்தது.

5. ரயான் மற்றும் ரய்னி ஆகியோரால் நடாத்தப்பட்ட வணிக அமைப்பு
   I. தனியுடமை வணிகம்
   II. பங்குடமை வணிகம்
   III. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
   IV. கூட்டுறவு சங்கம்

6. வணிகம் கடன்களை மீள செலுத்துவதற்கு போதிய சொத்துக்கள் இல்லாததனால் தமது சொந்த சொத்துக்களை அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. இதனுடன் தொடர்புடைய பண்பு,
   I. தொடர்ந்தியங்கும் தன்மை இன்மை.
   II. சட்ட ஆளுமை இன்மை
   III. வரையறுக்கப்படாத பொறுப்பு
   IV. பதிவு செய்தல் கட்டாயமன்று.

7. சில வணிக அமைப்புக்கள் X நிரலிலும் அவற்றின் பண்புகள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. தனியுடமை வணிகம் | A. பங்குகளை பங்குச் சந்தையில் விற்க முடியும். |
| 2. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி | B. தொழில் வல்லுநர்களுக்கு பொருத்தமானது. |
| 3. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி | C. ஆரம்பித்தல் இலகுவானது. |
| 4. பங்குடமை வணிகம் | D. மிக அதிக மூலதனம் திரட்டலாம். |

X நிரலுடன் Y நிரலை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையை தெரவு செய்க.
   I. ABCD
   II. ADBC
   III. CDBA
   IV. CADB

8. பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் 1. ……………………… ஆகும். 2. …………………………மற்றும் ………………………… ஆகியன வெளிநாட்டு வியாபாரத்தனின வகைகளாகும்.

மேலே 1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு மிகவும் பொருத்தமான விடைகளை முறையே கொண்ட தொகுதி,

   I. உள்நாட்டு வியாபாரம், மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம்
   II. சர்வதேச வியாபாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி
   III. வியாபாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி
   IV. வியாபாரம், மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம்

9. நடமாடும் சில்லறை வியாபாரத்திற்கான உதாரணத்தைக் கொண்ட தொகுதி,
   I. லலித்யா அழகுக்கலை நிலையம்
   II. குமரன் தனது மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று மீன் விற்றல்
   III. நிமலன் மளிகைக்கடை
   IV. சனத்தொகை செறிவான இடத்திலுள்ள சிறப்புச்சந்தை (Super Market)

10. நடைமுறை வைப்புடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் வருமாரு,
   A. காசோலை மூலமாக கொடுக்கல் வாங்கல் செய்தல்.
   B. வைப்பிலுள்ள பணத்திற்கு வட்டி பெறுதல்
   C. மேலதிகப்பற்று வசதிகள் கிடைத்தல்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றுக்களை மட்டும் கொண்ட தொகுதி,

I. A, B
II. B, C
III. A, C
IV. A, B மற்றும் C

11. கட்டிடப் பொருள் வணிகமொன்றை நடாத்தும் சமிந்த குமார், இலங்கை ஆடோமொபைல் கம்பனியிடம் (Automobile) கொள்வனவு செய்த அவரது 20 இலட்சம் பெறுமதியான காரை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்தார். மேலே சம்பவத்துடன் தொடர்புடைய மிகச்சரியான கூற்று.
   I. காப்புறுத்துவோன் - சமிந்த குமார்
   II. காப்புறுதி செய்வோன் - காப்புறுதி கூட்டுத்தாபனம்
   III. காப்புறுத்துவோன் - இலங்கை ஆடோமொபைல் கம்பனி
   IV. காப்புறுதி செய்வோன் - சமிந்த குமார்

12. வங்கி மேலதிகப் பற்றானது,
   I. வங்கி நடைமுறைக் கணக்கின் வரவு மீதி
   II. நீண்டகால நிதிக் கொடுப்பனவு
   III. சேமிப்பு வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் விசேட சலுகை
   IV. நடைமுறை வைப்பிலுள்ள மீதியை விட அதிக தொகைக்கு காசோலை வழங்க முடிதல்.

13. வேறுபட்ட தொடர்பாடல் முறைகள் X நிரலிலும் அவற்றுக்கான உதாரணங்கள் சில Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. வாய்மொழி | A. இணையம், தொலைக்காட்சி |
| 2. எழுத்து | B. கலந்துரையாடல், செயலமர்வு |
| 3. இலத்திரனியல் | C. கடிதங்கள், துண்டுப்பிரசுரம் |

மேலே தொடர்பாடல் முறைகளுடன் ஊடகங்களை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் மிகச்சரியான விடை,

I. BCA
II. BAC
III. ABC
IV. ACB

14. போக்குவரத்தின் அடிப்படை மூலங்களை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.
   I. சக்தி, வழி, வேகம், தரிப்பிடம்
   II. வழி, ஊடகம், சக்தி, தரிப்பிடம்
   III. ஊடகம், இயலளவு, வேகம், சக்தி
   IV. கிரயம், வேகம், இயலளவு, பாதுகாப்பு

15. முகாமைத்துவம் தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   I. ஒவ்வொரு வணிகமும் குறித்த ஒரு இலக்கை அல்லது பல நோக்கங்களை அடைவதற்காக செயற்படுகின்றன.
   II. பெரும்பாலான வணிகங்கள் தமது இலக்குகளை அடைவதற்காக தங்களது வளத்தை நன்றாக பயன்படுத்துகின்றன.
   III. தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குதல் நெறிப்படுத்தலாகும்.
   IV. வணிகத்தில் திட்டமிட்டவாறு நடவடிக்கைகள் இடம்பெறும் போது பரிகார நடடிவக்கைகள் மேற்கொள்ள வேண்டியதில்லை.

16. நன்கு அறிமுகமான ஆடை விற்பனையகம் ஒன்றில் நத்தாரை முன்னிட்டு, ரூ200 000 இற்கும் அதிகமான ஒவ்வொரு கொள்வனவிற்கும் இலவசமாக கைக்கடிகாரம் வழங்கப்படுகிறது. சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைவதற்காக இங்கு உபயோகிக்கப்படும் சந்தைப்படுத்தல் கலவை மாறி எது?

I. உற்பத்திப் பொருள்
II. விலை
III. இடம்
IV. மேம்படுத்தல்

17. கணக்கீட்டின் நோக்கமாக அமைவது,

I. சட்டத் தேவைகளை பூர்த்தி செய்தல்.
II. வணிகத்தின் நிதிநிலைமையை அறிதல்
III. போதியளவு இலாபம் ஈட்டப்பட்டுள்ளதா என்பதை அறிதல்
IV. தீர்மானமெடுப்பதற்கு அக்கறை செலுத்தும் பிரிவினருக்கு பயனுள்ள தகவல்கள் வழங்குதல்.

18. மூலதனத்தை தவிர உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் காரணி,

I. உரிமை
II. பொறுப்புக்கள்
III. வருமானம்
IV. செலவினங்கள்

19. கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு சமன்பாட்டில் தாக்கம் செலுத்தும் முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நிமலிடமிருந்து ரூ 15000 பெறுமதியான இருப்பு கொள்வனவு
II. ரூ.14000 பெறுமதியான பொருட்கள் சமீரவிற்கு விற்பனை
III. ரூ.15000 கடனை மீளசெலுத்தும் போது பெற்ற கழிவு ரூ.1000
IV. கடன்பட்டோரிடம் ரூ.14000 கடனை மீள பெறும் போது கொடுத்த கழிவு ரூ.1000

| சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| ரூ | | ரூ | | ரூ |
| -14000 | = | +1000 | | -15000 |

மேலே கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்,

20. சயுனி வணிகத்தில் 2021 இல் உள்ள சில தகவல்கள் பின்வருமாறு,

01.01.2021 இல் மூலதனம் ரூபா 300, 000
வருமானங்கள் ரூபா 100, 000
31.12.2021 இல் உரிமையாண்மை ரூபா 325, 000

சயுனி 2021இல் எடுப்பனவு ஏதும் செய்யவில்லை. 2021இல் அவரது செலவினங்கள்,

I. ரூபா 25000
II. ரூபா 75000
III. ரூபா 300000
IV. ரூபா 725000

21. செலவு அதிகரிக்கின்ற வரவு குறைக்கின்ற இரட்டைப்பதிவை கொண்ட விடையை தெரிவு செய்க.

I. மின்சார கணக்கு, கடன்பட்டோர் கணக்கு
II. கட்டடக் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு
III. வங்கிக்கடன் கணக்கு, கடன் கொடுத்தோர் கணக்கு
IV. பெற்ற தரகு கணக்கு, காப்புறுதி கணக்கு

22. பேரேடு என்பது,

I. வணிகத்தின் சகல கணக்குகளையும் உள்ளடக்கிய புத்தகம்
II. காசுக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கு தொகைகள்
III. வணிகத்தின் சகல கணக்குகளையும் உள்ளடக்கிய கணனி
IV. வணிகத்தின் சகல கணக்குகளின் சேர்மானம்

தரப்பட்டுள்ள தகவலைக் கொண்டு வினா 23 மற்றும் 24 ஆகியவற்றிற்கு விடை தருக.

A. காசு அடிப்படையில் இருப்பு விற்பனை செய்யப்பட்டது ரூபா 40 000
B. வணிகப் பாவனைக்கு தேவையான உபகரணங்கள் ரூபா 75 000 இற்கு ரணிலிடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

23. கொடுக்கல் வாங்கல் A இற்கான இரட்டைப் பதிவு,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I. | காசுக் கணக்கு | - | வரவு | - | ரூ.40000 |
| | விற்பனை கணக்கு | - | செலவு | - | ரூ.40000 |
| II. | காசுக் கணக்கு | - | வரவு | - | ரூ.40000 |
| | இருப்பு கணக்கு | - | செலவு | - | ரூ.40000 |
| III. | விற்பனை கணக்கு | - | வரவு | - | ரூ.40000 |
| | இருப்பு கணக்கு | - | செலவு | - | ரூ.40000 |
| IV. | இருப்பு கணக்கு | - | வரவு | - | ரூ.40000 |
| | விற்பனை கணக்கு | - | செலவு | - | ரூ.40000 |

24. கொடுக்கல் வாங்கல் B யை பதிவு செய்வதற்கான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு,
I. நாட்குறிப்பு கைச்சாத்து, பொது நாட்குறிப்பு
II. கொள்வனவு பட்டியல், கொள்வனவு நாட்குறிப்பு
III. பொது நாட்குறிப்பு, கொள்வனவு பட்டியல்
IV. கொள்வனவு நாட்குறிப்பு, நாட்குறிப்பு கைச்சாத்து

25. வணிகமொன்றில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலின் வரவுப்பதிவு கீழே தரப்பட்டுள்ளது,

காசுக் கணக்கு – வரவு ரூ.9500
கொடுத்த கழிவுக் கணக்கு – வரவு ரூ.500

இக்கொடுக்கல் வாங்கல்,
I. ரூ.500 கழிவு நீக்கிய பின் காசுக்கு இருப்பு விற்பனை ரூ.10000
II. ரூ.500 கழிவு நீக்கிய பின் கடனுக்கு விற்பனை ரூ.10000
III. ரூ.10000 பெறுமதியான கடன்பட்டோரிடம் 5% கழிவு நீக்கிய பின் காசு
IV. ரூ.10000 பெறுமதியான கடன்கொடுத்தோருக்கு 5% கழிவு நீக்கிய பின் செலுத்திய காசு

ராணி வணிகத்தில் 2021 மே மாதத்தில் இடம்பெற்ற இரு கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாரு, இத்தகவலைக் கொண்டு வினா 26 மற்றும் 27 இற்கு விடை தருக.

மே 07 – கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை ரூ.15000 உடனடியாக வைப்பிலிடப்பட்டது.

மே 15 – கடன்பட்டோரிடம் பெற்ற ரூ. 15000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது.

26. மே 07இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவை தெரிவு செய்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I. | காசுக் கணக்கு | - | வரவு | - | ரூ.15000 |
| | கடன்பட்டோர் கணக்கு | - | செலவு | - | ரூ.15000 |
| II. | காசுக் கணக்கு | - | வரவு | - | ரூ.15000 |
| | வங்கி கணக்கு | - | செலவு | - | ரூ.15000 |
| III. | வங்கி கணக்கு | - | வரவு | - | ரூ.15000 |
| | கடன்பட்டோர் கணக்கு | - | செலவு | - | ரூ.15000 |
| IV. | வங்கி கணக்கு | - | வரவு | - | ரூ.15000 |
| | காசுக்கணக்கு | - | செலவு | - | ரூ.15000 |

27. மே 15இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான செலவுப் பதிவு,
   I. வங்கிக் கணக்கு - செலவு ரூ.15000
   II. கடன்பட்டோர் கணக்கு - செலவு ரூ.15000
   III. காசுக்கணக்கு - செலவு ரூ.15000
   IV. மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கு - செலவு ரூ.15000

28. வங்கிக்கணக்கு மீதியுடன் ஒப்பிடும் போது வைப்பிலிடப்பட்டு வசூலிக்கப்படாத காசோலை காரணமாக,
   I. வங்கிக் கூற்று மீதி குறைவடையும்
   II. வங்கிக் கூற்று மீதி அதிகரிக்கும்
   III. வங்கிக் கூற்று மீதிக்கு சமமாக காணப்படும்
   IV. வங்கிக் கூற்று மீதியில் மாற்றம் ஏற்படாது.

29. ரொஷான் வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டு நிதி ரூ.5000 ஆகும். ஏப்ரல் மாத இறுதியில் சில்லறை காசாளரிடம் உள்ள மீதி ரூ.500 ஆகும். மே மாதத்தில் சில்லறை காசு செலவுகள் ரூ.4000 ஆகும். 2021 மே 1இல் மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு?
   I. ரூ.500
   II. ரூ.1000
   III. ரூ.4500
   IV. ரூ.5000

30. கொள்வனவு பட்டியலில் உள்ள விற்பனை விபரம் பின்வருமாறு,
   5/40 தேறிய 90
   5% கழிவு பெறுவதற்கு பணம் செலுத்த வேண்டியது,
   I. 90வது நாள் அல்லது அதற்கு முன்னர்
   II. 40வது நாள் அல்லது அதற்கு முன்னர்
   III. 40 தொடக்கம் 90 நாட்களுக்குள்
   IV. 50 நாட்களுக்குள்

31. ரவியினால் நடாத்தப்படும் உணவகமொன்றில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல் கீழே தரப்பட்டுள்ளன. பொது நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கலை தெரிவு செய்க.
   I. ரூ.5000 பெறுமதியான இனிப்புக்கள் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
   II. ஒன்று ரூ.80 வீதம் 25 குளிர்பான போத்தல்கள் விற்கப்பட்டன.
   III. ஜானகவிற்கு 20 பொதி அரிசி ஒன்று ரூ.400 வீதம் கடனுக்கு விற்கப்பட்டது.
   IV. தனபாலன் கம்பனிக்கு ரூ.8000 பெறுமதியான உபகரணங்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

32. தொலை வங்கி முறையினால் பூர்த்தி செய்யப்பட முடியாத நடவடிக்கை,
   I. வங்கி கணக்கு மீதியை தேடியறிதல்
   II. வங்கிக்கூற்று பெறுதல்
   III. ஓர் கணக்கிலிருந்து வேறொரு கணக்கிற்கு பணப்பரிமாற்றம் செய்தல்
   IV. காசோலை புத்தகம் பெறுதல்

33. ரூ.10000 பெறுமதியான கொள்வனவு பட்டியல் ஏடுகளில் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை திருத்தும் போது
   I. கொள்வனவு கணக்கில் ரூ20000 ஐ செலவு வைத்தல்
   II. கொள்வனவு கணக்கில் ரூ20000 ஐ வரவு வைத்தல்
   III. கடன்கொடுத்தோர் கணக்கில் ரூ100000 ஐ வரவு வைத்தல்
   IV. கடன்கொடுத்தோர் கணக்கில் ரூ100000 ஐ செலவு வைத்தல்

34. நிதிநிலைமைக் கூற்றில் உள்ளடங்கும் விடயங்களை சரியாக காட்டும் தொகுதி,

I. உரிமை, பொறுப்புக்கள் மற்றும் வருமானம்
II. வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள்
III. சொத்துக்கள், உரிமை மற்றும் பொறுப்புக்கள்
IV. சொத்துக்கள், உரிமை மற்றும் செலவினங்கள்

வினா 35 தொடக்கம் வினா 40 வரை பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்க.

| | ரூபா |
|---|---|
| விற்பனை | 500 000 |
| கொள்வனவு | 200 000 |
| இயந்திரம் (கிரயம்) | 400 000 |
| உட்சுமைக்கூலி | 10 000 |
| 01.01.2021இல் இருப்பு | 20 000 |
| கடன்பட்டோர் | 40 000 |
| மின்சாரம் | 15 000 |
| கடன் கொடுத்தோர் | 60 000 |
| விளம்பரம் | 12 000 |
| வட்டி | 10 000 |
| 01.01.2021இல் மூலதனம் | 600 000 |
| தரகு வருமானம் | 20 000 |
| காசு மீதி | 50 000 |
| வங்கி மேலதிகப்பற்று | 20 000 |

அனைத்து இருப்புக்களும் விற்கப்பட்டன.

35. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை கிரயம்,

I. ரூ. 220 000
II. ரூ. 230 000
III. ரூ. 270 000
IV. ரூ. 500 000

36. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த இலாபம்,

I. ரூ. 230 000
II. ரூ. 270 000
III. ரூ. 290 000
IV. ரூ. 730 000

37. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானம்,

I. ரூ. 270 000
II. ரூ. 290 000
III. ரூ. 500 000
IV. ரூ. 520 000

38. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த நிர்வாக செலவு,

I. ரூ. 10 000
II. ரூ. 15 000
III. ரூ. 25 000
IV. ரூ. 37 000

39. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் உள்ள மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்,

I. ரூ. 400 000
II. ரூ. 150 000
III. ரூ. 250 000
IV. ரூ. 370 000

40. சஹானா வணிகத்தின் 31.12.2021இல் நடைமுறை பொறுப்பு,

I. ரூ. 20 000
II. ரூ. 60 000
III. ரூ. 80 000
IV. ரூ. 680 000

# றோயல் கல்லூரி – கொழும்பு 07

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II**

## இரண்டாம் தவணை - 2022

**தரம் 11**

***02 மணித்தியாலம்***

குறிப்பு : ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

முதலாம் வினா உட்பட, பகுதி I மற்றும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01) வினா I தொடக்கம் X வரை பின்வரும் விடய ஆய்வினை வாசித்து விடை எழுதுக.

திருமதி ரொஷெல் பெர்னான்டோ திருமணம் மற்றும் விழாக்களுக்கான கேக்குகளை (Cake) உற்பத்தி செய்யும் வணிகமொன்றை நடாத்தி செல்லும் அனுபவமுள்ள கேக் வடிவமைப்பாளராவார். இவரது வீட்டின் ஒரு பகுதியில் 'ரொஷேல் கேக்லேண்ட்' (Roshel Cake land) செயற்படுகிறது. ரொஷேலின் மகள் கேக் தயாரிப்பில் விசேட அறிவைக் கொண்டுள்ளதுடன் அவர் தாயாருக்கு பெரும் உதவி வழங்குகிறார். அத்துடன் அனுபமுள்ள கேக் வடிவமைப்பாளர்களை பணிக்கமர்த்தியுள்ளார். தரமான மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ரொஷேல் கேக் இற்கு பாரிய கேள்வி நிலவுகிறது.
ரொஷேல் கேக்லேண்ட் வணிகத்தின் சில மீதிகள் வருமாறு,

| | ரூபா |
|---|---|
| கையிலுள்ள காசு | 265 000 |
| காணி மற்றும் கட்டிடம் | 300 000 |
| உபகரணம் கருவிகள் | 90 000 |
| மின் ஓவன் (Ovens) | 150 000 |
| கடன்பட்டோர் | 35 000 |
| கடன்கொடுத்தோர் | 76 000 |
| வங்கிக்கடன் | 200 000 |

2021 டிசம்பர் மாத கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| காசுக்கொள்வனவு | 155 000 |
| கடன்கொள்வனவு | 12 000 |
| காசுவிற்பனை | 450 000 |
| கடன் விற்பனை | 20 000 |
| சம்பளம் | 100 000 |
| வங்கிக்கடன் வட்டி | 4 000 |
| மின்சாரம் | 15 000 |
| போக்குவரத்து கட்டணம் | 8 000 |

திருமதி ரொஷேல் (Face book) முகப்புத்தகம் மற்றும் இணையத்தின் ஊடாக விளம்பரமொன்றையும் வெளியிட்டுள்ளார்.
எவ்வாறிருப்பினும் கொவிட் 19 காரணமாக இவரது வருமானம் குறைவடைந்திருந்தது. தற்போது படிப்படியாக அதிகரிப்பதுடன் சிசிர விற்பனை நிலையத்திடம் ரூ. 175 000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றை கடனுக்கு கொள்வனவு செய்துள்ளார்.

உபகரணம் கருவிகள் மற்றும் மின் ஒவன் (Oven) ஆகியவற்றிற்கு வருடாந்தம் 10% தேய்விடப்பட வேண்டும். 31.12.2021இல் இருப்பு எதுவும் எஞ்சியிருக்கவில்லை.

I. a) உற்பத்தி தன்மை அடிப்படையில் இது எவ்வகை வணிகமாகும்?

b) ‘ரொஷேல் கேக்லேண்ட்’ வணிகம் அடங்கும் வணிக அமைப்பு யாது?

II. a) இவ்வணிகத்துடன் தொடர்புடைய இரு உற்பத்திக் காரணிகளை தருக.

b) பலவீனம் மற்றும் அச்சுறுத்தலுக்கு உதாரணம் ஒவ்வொன்று வீதம் தருக.

III. திருமதி ரொஷேல் அவரது வணிகத்தை பதிவு செய்துள்ளார்.

a) இவ்வணிகத்தைப் பதிவு செய்வதுடன் தொடர்புடைய சட்டம் யாது?

b) இவ்வணிகத்தை பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

IV. a) இவ்வணிகத்துடன் தொடர்புடைய துணைச் சேவைகள் 2 தருக.

b) மேம்படுத்தலுக்கும் நெறிப்படுத்தலுக்கும், சந்தைப்படுத்தல் கலவையில் விளம்பரப்படுத்தலுக்கும் உதாரணம் ஒவ்வொன்று தருக.

V. 01.01.2021இல் கணக்கீட்டு சமன்பாட்டை தருக.

VI. a) இவ்வணிகத்தில் பயன்படுத்தப்படும் முதன்மை ஏடுகள் இரண்டையும் அவற்றுக்கான மூல ஆவணங்களையும் தருக.

b) வங்கிக்கடன் வட்டி செலுத்தியமைக்கான கணக்கீட்டு சமன்பாட்டை தருக.

VII. 31.12.2021இல் ‘ரொஷேல் கேக்லேண்ட்’ வணிகத்தின் காசு மீதியை கணிப்பிடுக.

VIII. கடனடிப்படையில் குளிர்சாதனப் பெட்டியை பெற்று கொண்டமைக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

IX. 31.12.2021இல் தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தை கணிக்க.

X. a) 31.12.2021இல் உரிமையாண்மை எவ்வளவு?

b) 31.12.2021இல் நடைமுறை சொத்து மற்றும் நடைமுறை பொறுப்பை பெறுமதியுடன் தருக.

## வணிகக்கல்வி

## பகுதி I

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

02)

I. a) விருப்பம் என்பது யாது?

b) தேவை மற்றும் விருப்பங்களுக்கிடையிலான இரு வேறுபாடுகளை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் சரியா தவறா என்பதை குறிப்பிடுக.

a) உற்பத்தி தன்மை அடிப்படையில் சில்லறை வியாபார நிறுவனங்கள் மற்றும் மொத்த வியாபார நிறுவனங்கள் பொருள் உற்பத்தி வணிகங்களாகும்.

b) இலங்கையின் உள்நாட்டு வணிகங்கள் சமூக நல நோக்கிலேயே செயற்படுகின்றன.

c) வணிகங்களுக்கு பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்குதல் அரசாங்கத்தின நோக்கமாகும்.

d) பங்குடமை ஒப்பந்தத்துக்கமைய பங்குடமை வணிகங்கள் செயற்படுகின்றன.

(2 புள்ளிகள்)

III. அனோமா தாய் மற்றும் பாட்டியின் தூண்டுதலால் காலியில் பாரம்பரிய நாடா உற்பத்தி கைத்தொழிலில் ஈடுபடும் திறமையான வடிவமைப்பாளராவார். இவர் மேலும் இரு வடிவமைப்பாளர் உதவியுடன் தனது வீட்டின் ஒரு பகுதியில் ‘அனோமா லேஸ்’ (Anoma Lace) எனும் பெயரில் வணிகமொன்றை நடாத்துகிறார். தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் இவரது உற்பத்திகளுக்கு பாரிய கேள்வி நிலவுகிறது.

a) ‘அனோமா லேஸ்’ வணிகத்தின் அக்கறையுடைய தரப்பினர்கள் இருவரை குறிப்பிட்டு அவர்களின் பங்களிப்புக்கள் ஒவ்வொன்று தருக.

b) பலம் மற்றும் வாய்ப்புக்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

IV. அச்சல, அமில மற்றும் சமில ஆகியோர் புதிய தொழிநுட்பத்துடனான வாகனம் திருத்தும் வணிகமொன்றை 'எக்ஸ்பிரஸ் ஆடோ சேர்விஸஸ்' (Express auto Services) எனும் பெயரில் நடாத்துகின்றனர். உரிமையாளர் மூவரும் மோட்டார் மெக்கானிக் இல் அனுபமுடையவர்களாதலால் வணிக நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வை செய்கின்றனர். மேலும் இவ்வணிகத்தை அதிக மூலதனத்துடனும் வரையறுக்கப்பட்ட பொறுப்புடனும் வாடிக்கையாளர் மத்தியில் பிரபல்யமான வணிகமாக விஸ்தரிப்பதற்கு எதிர்ப்பார்க்கின்றனர்.

a) 'எக்ஸ்பிரஸ் ஆடோ சேர்விஸஸ்' வணிகத்தில் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகள் இரண்டை உதாரணத்துடன் குறிப்பிடுக.

b) விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வணிக அமைப்பினது அனுகூலம் மற்றும் பிரதிகூலம் ஒவ்வொன்று தருக. (2 புள்ளிகள்)

03)

I. அமாயா இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தைத்த ஆடைகள் மற்றும் சேலைகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்துகின்றார். இவர் இந்தியாவிலுள்ள 'ஸ்ரீகாந்த் டெக்ஸ்டைல்ஸ்' (Srikant Textiles) உடன் இருவாரங்களுக்குள் இலங்கைக்கு தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தமொன்றை செய்துள்ளார்.

a) தரப்பட்ட தரவுகளின் படி ஏற்றுமதியாளர் மற்றும் இறக்குமதியாளர் யார்?

b) மேலே கட்டளைக்கு பொருத்தமான போக்குவரத்து முறை மற்றும் வழியை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் சரியானதா தவறானதா எனக் குறிப்பிடுக.

A. நுகர்வோர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளாமையால் மொத்த வியாபாரிகள், அவர்கள் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுவதில்லை.

B. நிலையான வைப்பிலுள்ள பணத்தை கடனட்டைகள் மூலம் பரிமாற்றம் செய்யலாம்.

C. காசோலையொன்றின் காந்தமைப்புலப்பகுதியில், (MICR) இறுதியாக இருப்பது பணம் பெறுபவரின் நடைமுறை வைப்பின் கணக்கிலக்கமாகும்.

D. அடகு வைக்கப்படும் பொருட்களை காப்புறுதி செய்யும் உரிமை அடகு நிலையங்களுக்கு உண்டு. (2 புள்ளிகள்)

III. ரெக்ஸ் தனது வணிக கட்டிடத்திற்காக ரூ. 500 இலட்சம் பெறுமதியான காப்புறுதியை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் பெற்றுள்ளார். கட்டிடத்தின் ஒரு பகுதி தீயினால் முற்றாக சேதமடைந்துள்ளது. ரெக்ஸ் தொலைபேசி மூலமாக காப்புறுதி நிறுவனத்திற்கு தீயழிவு தொடர்பாக அறிவித்த பின் காப்புறுதி பணியாளர்கள் இழப்பை ரூபா 100மில்லியன் என மதிப்பீடு செய்தனர். ரெக்ஸ் ரூ. 500 மில்லியனை இழப்பீடாக கோரினார். ஆனாலும் காப்புறுதி கூட்டுத்தாபனம் ஒப்பந்தப்படி ரூ. 100 மில்லியனை மட்டுமே வழங்க முடியும் என கூறியது.

a) ரூ. 800 மில்லியனை இழப்பீடாக வழங்க முடியாமைக்கு தாக்கம் செலுத்தும் காப்புறுதி தத்துவம் யாது?

b) தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைகளை மேலே சம்பவத்திலிருந்து தெரிவு செய்து உதாரணத்துடன் எழுதுக. (2 புள்ளிகள்)

IV. a) காசோலையுடன் தொடர்புடைய கட்சியினரை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

b) காசோலையில் குறுக்குக் கோடிடல் மற்றும் புறக்குறிப்பிடலின் நோக்கங்களை தனித்தனியே குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

04) .

I. a) முகாமைத்துவம் என்பது யாது?

b) விளைதிறன் மற்றும் வினைதிறனை விளக்குக. (2 புள்ளிகள்)

II. பின்வரும் கூற்றுக்கள் சரியானதா பிழையானதா எனக் குறிப்பிடுக.

a) விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்களின் பற்றாக்குறையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாகும்.

b) ஒழுங்குபடுத்தல் செயன்முறையில் தலைமைத்துவம் மற்றும் ஊக்கப்படுத்தல் மிகமுக்கிய செயற்பாடாகும்.

c) மனித தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதற்காக பொருட்களை உற்பத்தி செய்தல் சந்தைப்படுத்தல் ஆகும்.

d) கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்திக்கின்ற இடம் மட்டுமே சந்தை எனப்படுகிறது. (2 புள்ளிகள்)

III. a) சந்தைப்படுத்தலில் முதலாவது மற்றும் இறுதி செயற்பாடு யாது?

b) இலக்கு சந்தை என்பது யாது? (2 புள்ளிகள்)

IV. 'மில்க் வே' (milk way) இனிப்பான காய்ச்சிய பால் உற்பத்தி செய்யும் வணிகமாகும். இது கவர்ச்சியான பொதிகளில் வழங்குவதுடன் புதுவருட பண்டிகை காலத்தில் சந்தைகளில் 10% கழிவு வழங்குகிறது. சந்தையில் இடம்பிடிப்பதற்காக சில தொலைக்காட்சி விளம்பரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

a) மேலே தரவுகளின்படி இரு முகாமைத்துவ கருமங்களுக்கு உதாரணம் தருக.

b) இதனடிப்படையில் சந்தைப்படுத்தல் மாறிகள் இரண்டிற்கு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

## கணக்கீடு
## பகுதி II

05)

I. a) உரிமையாண்மை என்பது யாது?

b) பொறுப்புக்களின் பண்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)

II. பின்வரும் கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவை எழுதுக.

a) உரிமையாளரால் ரூ.25 000 பெறுமதியான அலுவலக உபகரணம் மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.

b) கட்டிட வாடகை வருமானம் ரூ. 12000 காசோலை மூலம் பெறப்பட்டது. (2 புள்ளிகள்)

III. அம்ஜத் வணிகத்தின் கணக்கீட்டு சமன்பாடு பின்வருமாறு.

| திகதி | கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் = ரூபா | பொறுப்புக்கள் + ரூபா | உரிமை ரூபா |
|---|---|---|---|---|
| 01.12.2021 | 01 | -12000 இருப்பு<br>+15000 கடன்பட்டோர் | | +3000 இலாபம் |
| | 02 | | -17000 கடன்கொடுநர் | +17000 |
| | 03 | +9500 காசு<br>-10000 கடன்பட்டோர் | | -500 கொடுத்த கழிவு |
| | 04 | + 50000 இயந்திரம்<br>-50000 காசு | | |

01.12.2021 இல் அம்ஜத் வணிகத்தின் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புக்கள் முறையே ரூ. 225 000 மற்றும் ரூ. 35 000 ஆகும்.

வேண்டப்படுவது:

1. கணக்கீட்டு சமன்பாட்டின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குக.

2. 07.12.2021 இல் கணக்கீட்டு சமன்பாட்டை பெறுமதியுடன் தருக. (4 புள்ளிகள்)

IV. ஜயலால் வணிகத்தின் 2021 டிசம்பர் மாத கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாரு,

| திகதி | கொடுக்கல் வாங்கல் | மேலதிக தகவல் |
|---|---|---|
| 07.12.2021 | 1. ஒன்று ரூ. 250 வீதம் 20 A4 கடதாசி ‘கரின் பேப்பர் எழுதுகருவி’ யிடம் கடன் கொள்வனவு | வியாபார கழிவு 5% வழங்கப்பட்டது. |
| 15.12.2021 | 2. ஒன்று ரூ. 15 வீதம் 50அடி மட்டம் அட்லஸ் கம்பனியிடம் காசுக்கு கொள்வனவு | வியாபார கழிவு 5% வழங்கப்பட்டது. |
| 23.12.2021 | 3. ஒன்று ரூ. 25 வீதம் 100 பேனைகள் குருசிங்க வியாபார நிறுவனத்திடம் கடனுக்கு கொள்வனவு | - |
| 28.12.2021 | 4. தம்புள்ள வணிகத்திடம் ரூ.30 000 பெறுமதியான புத்தக இராக்கை கொள்வனவு | வியாபார கழிவு 10% வழங்கப்பட்டது. |

வேண்டப்படுவது:

a) 31.12.2021 இல் கொள்வனவு நாளேட்டை தயாரிக்க.

b) உரிய பேரேட்டு கணக்குகளை தயாரிக்க (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06)

I. a) மறுக்கப்பட்ட காசோலை என்பது யாது?

b) கடன் கொடுத்தோருக்கு ரூ.30000 பெறுமதியான காசோலை வழங்கப்படுதலுக்கான இரட்டைப் பதிவை எழுதுக. (2 புள்ளிகள்)

II. ரன்திய கம்பனி லிமிடட் இன் சில்லறை காசேட்டுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2021 நவம்பர் மாத சில்லறை செலவுகள் ரூ.4600
- நவம்பர் மாதத்தில் சில்லறை காசாளரிடம் உள்ள மீதி ரூ.400

வேண்டப்படுவது,

a) இவ்வணிகத்தின் சில்லறை காசு வசக்கட்டு எவ்வளவு?

b) வணிகத்தின் சில்லறை காசு வசக்கட்டு தொகையை ரூ.2000ஆல் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டால் 01.12.2021 இல் மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

III. ரஞ்சனி வணிகத்தில் 31.12.2021 இல் வரவு மீதிகளின் கூட்டுத்தொகையும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகையும் இணங்கவில்லை. வேறுபாட்டு தொகை தொங்கல் கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டதுடன், பின்வரும் தவறுகள் இனங்காணப்பட்டன.

- கொள்வனவு கணக்கின் வரவுப்பக்கம் ரூ.5000 ஆல் குறைத்து கட்டப்பட்டிருந்தது.
- பெற்ற கழிவு கணக்கின் மீதி ரூ.1300 பரீட்சை மீதியின் வரவுப்பக்கத்தில் பதியப்பட்டது.
- வட்டி வருமான கணக்கு ரூ.2500 வாடகை வருமான கணக்கில் பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

a) மேலே வழுக்களை திருத்துவதற்கான இரட்டைப் பதிவுகளை எழுதுக.

b) தொங்கல் கணக்கை தயாரித்து மீதியைக் காண்க. (4 புள்ளிகள்)

IV. a) வங்கிக் கூற்றை விட வங்கிக் கணக்கின் மீதி அதிகமாக காணப்படுவதற்கான காரணங்கள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)

b) ரசிகா வணிகத்தின் 2021.12.31 இல் வங்கிக் கணக்கின் மீதி ரூ.21000 ஆகும். இது வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபட்டு காணப்பட்டது. பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

1. வழங்கப்பட்டு இன்னும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ.7000
2. நிலையான கட்டளையின் பெயரிலான காப்புறுதி கொடுப்பனவு ரூ.4500
3. நேரடி வைப்பு ரூ.13000
4. வைப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலை ரூ.6500

வேண்டப்படுவது,

2021.12.31 இல் திருத்திய வங்கிக் கணக்கை தயாரிக்க. (2 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

07)

I. a) பெறுமானத் தேய்வு என்பது யாது?

b) பெறுமானத் தேய்வை பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவை எழுதுக. (2 புள்ளிகள்)

II. a) தொலை வங்கிச் சேவையை சுருக்கமாக விளக்குக.

b) கணணிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலம் மற்றும் பிரதிகூலம் ஒவ்வொன்று தருக. (2 புள்ளிகள்)

III. ராமர் வணிகத்தின் 31.12.2021இல் பரீட்சை மீதி பின்வருமாரு,

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2021.01.01 இல் இருப்பு | 26000 | |
| கொள்வனவு | 365000 | |
| உட்சுமை கூலி | 4500 | |
| விற்பனை | | 505000 |
| கடன்பட்டோர் | 45000 | |
| கடன்கொடுத்தோர் | | 55000 |
| முதலீடுகள் | 50000 | |
| காப்புறுதி | 2500 | |
| காசு | 48000 | |
| வங்கி மீதி | 20000 | |
| கொடுத்த கழிவு | 1500 | |
| பெற்ற கழிவு | | 2300 |
| மின்சாரம் | 8000 | |
| தரகு வருமானம் | | 3200 |
| 12% வங்கிக் கடன் | | 100000 |
| விநியோக லொறி (கிரயம்) | 400000 | |
| பெறுமான தேய்வு ஏற்பாடு 01.01.2021இல் | | |
| விநியோக லொறி | | 80000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 25000 | |
| மூலதனம் | | 250000 |
| | 995500 | 995500 |

மேலதிக தகவல்கள்

1. 31.12.2021இல் இருப்பு ரூ.23000
2. விநியோக லொறி வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் தேய்விடப்பட வேண்டும்.
3. பெறவேண்டிய தரகு வருமானம் ரூ.6000

வேண்டப்படுவது,

1. 2021.12.31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று
2. 2021.12.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (4+4= 8 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)